

புரட்சிப்

# பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2048 | டிசம்பர் 14, 2017 | புரட்சி 16 | முழக்கம் 48 | விலை: ரூ.3.00


## பிற்படுத்தப்பட்டோருக்கான 27 சதவீத இடஒதுக்கீடு பாதியளவுகூட நிரப்பப்படவில்லை

# நடுவண்அரசுகளின் துரோகம்

**பிற்படுத்தப்பட்டோருக்கு மத்திய அரசு பதவிகளில் 27 சதவீத இடஒதுக்கீடு வழங்கும் வரலாற்றுச் சிறப்பு மிக்க ஆணையைப் பிறப்பித்தார், சமூக நீதிக் காவலரான பிரதமர் வி.பி.சிங். 24 ஆண்டுகள் கழிந்த பிறகும் 27 சதவீதத்தில் இன்னும் பாதியளவுகூட பிற்படுத்தப்பட்டோருக்குப் பணிகள் வழங்கப்படவில்லை என்ற அதிர்ச்சியான தகவல்கள் வெளி வந்துள்ளன.**

தகவல் அறியும் சட்டத்தின் கீழ் பெறப்பட்டுள்ள தகவல்கள் அதிர்ச்சியூட்டுகின்றன. 1993 செப்டம்பர் 8ஆம் தேதி பிற்படுத்தப்பட்டோருக்கான இடஒதுக்கீடு நடைமுறைக்கு வந்தது. இப்போது என்ன நிலை? மத்திய அரசின் வேலை வாய்ப்புத் துறை அமைச்சகம் தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் வெளியிட்டுள்ள தகவலின்படி ஜனவரி 1, 2017 வரை இதுதான் நிலை.

24 மத்திய அமைச்சகங்களில் குரூப் ‘ஏ’ பிரிவு அதிகாரிகளில் பிற்படுத்தப்பட்டோர் 17 சதவீதம் பேரும் ‘பி’ பிரிவில் 14 சதவீதம் பேர் மட்டுமே பணியாற்றுகிறார்கள். ‘சி’ பிரிவு ஊழியர்களில் 11 சதவீதம் பேரும், ‘டி’ பிரிவில் 10 சதவீதம் பேரும் பணியாற்றுகிறார்கள். 24 அமைச்சகங்கள், மொத்தமுள்ள 37 அரசுத்துறைகளில் 24 துறைகள், சட்ட அங்கீகாரம் பெற்ற 8 அமைப்புகள் (பிரதமர் அலுவலகம், குடியரசுத் தவைர் செயலகம், பொருளாதாரம் தொடர்பான அமைப்புகள்) உள்ளிட்ட 54 நிறுவனங்கள், துறைகள் பற்றியும் தகவல்கள் கிடைத்துள்ளன. இவற்றில் குரூப் ‘ஏ’ பிரிவில் 14 சதவீதம். ‘பி’, ‘சி’, ‘டி’ பிரிவுகளில் முறையே 15, 17, 18 சதவீதமும் மட்டுமே பிற்படுத்தப்பட்டவர்கள் இருக்கிறார்கள்.

மத்திய அமைச்சரவைக்கான செயலகத்தில் (Cabinet Secretariat) 64 ‘ஏ’ பிரிவு அதிகாரிகளில், ஒருவர்கூட பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்தவர் இல்லை. 60 பேர் திறந்த போட்டியில் வந்தவர்கள் (இவர்கள்பார்ப்பனர், உயர் ஜாதியினர்) பட்டியல் இனப்பிரிவைச் சார்ந்தவர்கள் 4 பேர் மட்டுமே. தகவல் மற்றும் ஒலி/ ஒளி பரப்பு அமைச்சகத்தில் மொத்தமுள்ள 503 ‘ஏ’ பிரிவு அதிகாரிகளில் 25 பேர் மட்டுமே பிற்படுத்தப்பட்டவர்கள்.

2015ஆம் ஆண்டில் இதே சட்டத்தின் கீழ் பெறப்பட்ட தகவலின்படி, 12 அமைச்சகங்கள் 10அரசுத் துறைகள், மற்றும் சட்ட அங்கீகாரமுள்ள நிறுவனங்களில் பிற்படுத்தப்பட்டோருக்குக் கிடைத்த இடங்களின் எண்ணிக்கை ‘ஏ’ பிரிவில் 10.71 சதவீதம், ‘பி’ பிரிவில் 7-18 சதவீதம்.

2013ஆம் ஆண்டு பெறப்பட்ட தகவலின்படி 55 மத்திய அரசின் கீழ் உள்ள அமைப்புகளில் பிற்படுத்தப்பட்டோர் எண்ணிக்கை 9.43 சதவீதம் மட்டுமே.

சென்னையைச் சார்ந்த சமூக செயல்பாட்டாளர் முனைவர் ஈ. முரளிதரன், இந்த தகவல்களைப் பெற்றுள்ளார். முனைவர் முரளிதரன், சென்னை அய்.அய்.டி.யில் படித்து, முனைவர் பட்டம் பெற்றவர். சமூக நீதிக்காகக் குரல் கொடுத்தக் காரணத்தால் அய்.அய்.டி. பார்ப்பன நிர்வாகம் பழி வாங்கியது. அய்.அய்.டி. வளாகத்துக் குள்ளேயே அவர் நுழையக் கூடாது என்று உயர்நீதிமன்றம் வழியாக அய்.அய்.டி. நிர்வாகம் தடை வாங்கியது. தொடர்ந்து பார்ப்பன நிறுவனங்களுக்கு எதிராக அவர் போராடி வருகிறார். ஏற்கனவே அய்.அய்.டி. நிறுவனங்களில் இடஒதுக்கீடுகள் மறுக்கப்பட்டதை தகவல் அறியும் உரிமை சட்டத்தின்கீழ் வெளிச்சத்துக்கு கொண்டு வந்தவர் முனைவர் முரளீதரன்.

இப்போது மத்திய வேலை வாய்ப்புத் துறை அமைச்சகம் தந்துள்ள தகவல்கள் குறித்து அவர் தெரிவித்த கருத்துகள் மிகவும் முக்கியமானவை.

“இப்போது தரப்பட்டிருக்கும் தகவல்கள் கூட முழுமையானவை அல்ல. இவற்றில் 11 அமைச்சகங்கள் தகவல் தெரிவிக்க மறுத்துவிட்டன. இந்தத் துறைகள்தான் வேலை வாய்ப்புகள் மிக அதிகமாக இருக்கும் துறைகள், தொடர்வண்டித் துறை, பாதுகாப்புத் துறை, உள் துறை, நிதித் துறை போன்றவை தகவல் தெரிவிக்க மறுத்துவிட்டன. மத்திய அரசின் மொத்த வேலை வாய்ப்புகளில் 91.25 சதவீத வேலை வாய்ப்புகள் இந்தத் துறைகளில்தான் இருக்கின்றன. இப்போது தகவல் தெரிவித்துள்ள 24 அமைச்சகங்களில் மொத்த வேலைகளில் 8.75 சதவீதம் வேலைகள் மட்டுமே உள்ளன. 2011 மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி தொடர்வண்டித் துறையில் மத்திய அரசுப் பணியாளர்களாக பதிவு செய்தவர்கள் 13,28,199. இவர்கள் நிரந்தரப் பணியாளர்கள். இவர்களில் பிற்படுத்தப்பட்டோர், பட்டியல் இனப் பிரிவினர் குறித்த எந்தத் தகவலும் இல்லை.

**மத்திய அரசுப் பணிகளில் 31 இலட்சம் பேர் பணியாற்று கிறார்கள். ஆனால், இப்போது தகவல் அறியும் சட்டத்தின் கீழ் நாம் பெற்றிருக்கும் தகவல் 2 இலட்சத்து 31 ஆயிரத்து 735 ஊழியர்களைப் பற்றி மட்டுமே.**

2015ஆம் ஆண்டில், நான் தகவல் கேட்டபோது, 40 அமைச்சகங்கள், 48 மத்திய அரசுத் துறைகள், பிற்படுத்தப்பட்டோர் எண்ணிக்கைக் குறித்து, தகவல் தர மறுத்து விட்டன.

மத்திய வேலை வாய்ப்பு, பொது மக்கள் குறை தீர்ப்பு மற்றும் ஓய்வூதியத் துறை, 2013ஆம் ஆண்டு டிசம்பர் 19ஆம் தேதி, ஒரு தாக்கீதை பிறப்பித்தது. (O.M. No.43011.10.2002 Estt. Res) இதன்படி ஒவ்வொரு துறையிலும் பணியாற்றும் பட்டியல் இனம், பழங்குடி மற்றும் இதர பிற்படுத்தப்பட்டோர் எண்ணிக்கை பிரதிநிதித்துவம் குறித்தத் தகவலைத் தெரிவிப்பது கட்டாயக் கடமை’ என்று இந்த தாக்கீது அறிவுறுத்தியது. ஆனால் அது கிடப்பில் போடப்பட்டது.

2013 ஜூன் மாதம் மத்திய வேலை வாய்ப்பு அமைச்சகம் விரிவான ஒரு தாக்கீதைப் பிறப்பித்தது. (No.36038/1(i) 2013 Estt. Res) அதில் பட்டியல் இனப் பிரிவினர், பழங்குடியினர், பிற்படுத்தப்பட் டோருக்கான நிரப்பப்படாத பணியிடங்களை, விரைவாகக் கண்காணித்து, உயர்மட்ட அளவில் முடிவுகளை உடனடியாக எடுக்க வேண்டும் என்று கூறியது. 6 மாதத்துக்குள் பணியிடங்களை நிரப்புவதற்கான விரைவான செயல்பாடுகளை முடுக்கிவிட வேண்டும். அதற்காகத் தேவைப்பட்டால், விதிகளிலிருந்து விலக்குகளை வழங்கலாம் என்றும் தாக்கீது அறிவுறுத்தியது.

இதைத் தொடர்ந்து மத்திய வேலை வாய்ப்புத் துறை இணை அமைச்சர் ஜிதேந்திரசிங் நாடாளுமன்றத்தில் ஒரு அறிவிப்பை வெளியிட்டார். சமூக நீதித் துறைஅமைச்சகத்தின் பரிந்துரைப்படி இடஒதுக்கீட்டுப் பிரிவினருக்கான நிரப்பப்படாத இடங்களை நிரப்புவதற்கான முனைப்பான செயல்பாடுகள் 2014 நவம்பர் 11இல் தொடங்கி, ஆகஸ்டு 2016க்குள் முடிக்கப்படும் என்றார்.

இதற்கான செயல் திட்டங்களும் உருவாக்கப்பட்டன. அந்த செயல் திட்டங்கள் செயலாக்கம் பெற்றிருக்குமேயானால் இவ்வளவு மோசமான நிலை ஏற்பட்டிருக்காது. தாக்கீதுகளோ, செயல் திட்டங்களோ முழுமையாக அலட்சியப்படுத்தப்பட்டதைத்தான் இந்த புள்ளி விவரங்கள் காட்டுகின்றன, என்றார் முனைவர் முரளீதரன்.

“காலி இடங்களை நிரப்புவதில் சுழற்சி முறை பின்பற்றப்படாதது தான் இதற்குக் காரணம்” என்று பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்தின் முன்னாள் உறுப்பினர் எஸ்.கே.கார்வேந்தன் கூறினார்.

அகில இந்திய பிற்படுத்தப்பட்ட ஊழியர் நலச் சங்கத்தின் செயலாளர் கே. தனசேகர் கூறுகையில்,

“23 வயதில் மத்திய அரசுப் பணியில் நுழையும் பிற்படுத்தப்பட்டோர் மட்டுமே பதவி உயர்வுக்கான தகுதிகளைப் பெற்று, உதவி செயலாளர் அல்லது கீழ்நிலை செயலாளர் நிலைக்கு பதவி உயர முடியும். பலரும் 30 வயதில்தான் பணியில் சேருவதால் அவர்கள் ஓய்வு பெறும்போது கீழ்நிலை செயலாளர் என்ற நிலையைத் தாண்ட முடியவில்லை; இட ஒதுக்கீடு முறையாக அமுல்படுத்தப்படாததே இதற்குக் காரணம்” என்றார்.

இடஒதுக்கீடு சட்டமாக இருந்தாலும் அதை நிறைவேற்றும் அதிகார மய்யம் பார்ப்பன அதிகார வர்க்கத்தின் பிடியில் இருப்பதால் சமூகநீதி சட்டங்கள் சவக்குழிக்கு அனுப்பப்படுகின்றன.

**உள்ளே – தலையங்கம்**

தலையங்கம்

## 24 ஆண்டுகளுக்குப் பிறகும்...

மண்டல் பரிந்துரை செயல்பாட்டுக்கு வந்து 24 ஆண்டுகளுக்குப் பிறகும், 27 சதவீத இடஒதுக்கீட்டில் மத்திய அரசுப் பணிகளில் பாதியளவைக்கூட எட்டிப் பிடிக்க முடியாத நிலையில் தான் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தின் நிலை உள்ளது. சமூக நீதி செயல்பாட்டாளர் முனைவர் ஈ. முரளிதரன், தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் கீழ் கேட்டுப் பெற்றுள்ள தகவல்களை இதே இதழில் வெளியிட்டிருக்கிறோம்.

காங்கிரஸ் ஆட்சியானாலும், பா.ஜ.க ஆட்சியானாலும் சமூக நீதிக்கான கதவுகள் அடைக்கப்பட்டே இருக்கின்றன. முடிவெடுக்கும் அதிகார மய்யத்தில் கோலோச்சும் பார்ப்பன அதிகார வர்க்கம் தொடர்ந்து ஒடுக்கப்பட்ட சமூகத்தினரோடு அதிகாரங்களைப் பகிர்ந்து கொள்ள மறுத்து வருகிறது. இதைத் தட்டிக் கேட்கும் துணிவு கொண்ட ஆட்சியாளர்களோ, சக்தி வாய்ந்த சமூக நீதித் தலைவர்களோ இல்லை என்பதுதான் அவலம். இருக்கும் நிலையைப் பார்த்தால் இந்த நூற்றாண்டில்கூட 27 சதவீத இடஒதுக்கீட்டில் முழுமையாகப் பிற்படுத்தப்பட்டோர் அமரப்போவது கனவாகத்தான் இருக்கும்.

இந்துத்துவா சக்திகள் பெரும்பான்மைவாதம் பேசுகிறார்கள். இந்துக்களை பெரும்பான்மையாகக் கொண்ட ஒரு நாட்டில் இந்துத்துவா ஆட்சியே நடக்க வேண்டும் என்று வாதிடுகிறவர்கள், அவர்கள் கட்டமைத்துள்ள ‘இந்து’ மதத்தில் பெரும்பான்மையாக உள்ள பிற்படுத்தப்பட்டோருக்கு அதிகாரத்தில் உரிய பங்கு வழங்க மறுப்பதை, ஏன் தட்டிக் கேட்காமல் வாய்மூடிக் கிடக்கிறார்கள்? இவர்கள் பேசும் பெரும்பான்மைவாதம் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு பொருந்தாதா என்று கேட்கிறோம்.

சிறுபான்மையினர் என்றும், தேசபக்தி இல்லாதவர்கள் என்றும், இந்த மண்ணின் மைந்தர்களாக வாழும் இஸ்லாமிய மக்களை குற்றம்சாட்டுகிறவர்களைக் கேட்கிறோம். ‘இந்து’ மதத்துக்குள்ளே சிறுபான்மையினராக இருந்து கொண்டு சமூக, கலாச்சார, அரசியல் அதிகாரத்தைத் தங்கள் இரும்புப் பிடிக்குள் வைத்திருக்கும் ‘பார்ப்பன சிறுபான்மை ஆதிக்கக் கொடுமை’யை அப்படியே பெருமையோடு ஏற்றுக் கொண்டு அடிபணிந்து கிடப்பது என்ன நியாயம்? பார்ப்பன வேத கலாச்சாரம் தான் பெரும்பான்மை பார்ப்பனரல்லாத ‘இந்து’ கலாச்சாரமா? மோடி அமைச்சரவையில் இப்போதும் முக்கிய அமைச்சர் களாக “சிறுபான்மை” பார்ப்பனர்கள் தானே அமர்த்தப் பட்டிருக்கிறார்கள்?

அம்பேத்கருக்கு சொந்தம் கொண்டாடும் நாடகத்தை நடத்தி வரும் ஆர்.எஸ்.எஸ். தலைவர் மோகன் பகவத், அவ்வப்போது ‘இடஒதுக்கீட்டுக்கு’ ஆதரவாகப் பேசி வருவது உண்மையானது என்றால், பிற்படுத்தப்பட் டோருக்கான இடஒதுக்கீடுகள் அமுல்படுத்தப்படா மலிருப்பதை தட்டிக் கேட்க முன் வருவாரா என்று கேட்கிறோம்.

தமிழ்நாட்டில் பல ஜாதித் தலைவர்கள், ஜாதி சங்கங்களை வைத்துக் கொண்டு அதை அரசியல் மூலதனமாக்க துடிக்கிறார்கள். சமூக நீதிக்குப் போராட வேண்டிய பிற்படுத்தப்பட்ட ஜாதி அமைப்புகள், தங்களை ‘ஜாதி இந்துக்களாக’ உருமாற்றிக் கொண்டு தலித் மக்களோடு முரண்பாடுகளையும் மோதல்களையும் உருவாக்கி வருகிறார்கள். இந்த ஜாதி சங்கத் தலைவர்கள் இந்திய பார்ப்பன அதிகார அமைப்புக்குள் ஒடுக்கப்பட்ட மக்கள் சமூக நீதி மறுக்கப்பட்டவர்களாக உரிய பிரதிநித்துவ மற்றவர் களாகக் கிடப்பதைக் கண்டு கொதித்தெழ வேண்டாமா?

ஒடுக்கப்பட்ட சமூக மக்கள் தாழ்த்தப்பட்டவர், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டவர், இஸ்லாமியர், கிறிஸ்தவர் என்று எந்தப் பிரிவினராக இருந்தாலும், பார்ப்பன அதிகார மய்யத்தை நெருங்க முடியவில்லை. முடிவெடுக்கும் அதிகாரமற்ற ஒரு இந்தியாவுக்குள் சமூக நீதியை மறுக்கும் பார்ப்பன ஜனநாயக அமைப்புக்குள் முடக்கப்பட்டுள்ளார்கள். இந்த நிலை உணர்ந்து ஓரணியாய் போர்ச் சங்கு ஊதிப் புறப்பட்டால், ஆதிக்கக் கோட்டைகளைத் தகர்த்து எறிய முடியாதா? அத்தகைய ஒற்றுமையைக் கட்டமைக்க வேண்டாமா?

இடஒதுக்கீட்டுக்காக இந்தியாவில் முதன்முதலாக அரசியல் சட்டத்தைத் திருத்தச் செய்த பெருமை தமிழ்நாட்டுக்கு உண்டு. அதற்கான போராட்டக்களம் பெரியார் தலைமையில் அமைந்தது.

மண்டல் பரிந்துரையை செயல்படுத்துவதற்கான நிர்ப்பந்த சக்தியாய் எழுந்து நின்றது இதே தமிழ்நாடு தான். 27 சதவீத இடஒதுக்கீட்டை அமுல்படுத்தி அதற்காக தனது பிரதமர் பதவியையே விலையாகக் கொடுத்த சமூக நீதிக் காவலர் வி.பி.சிங்கிற்கு ஆதரவுக் கரம் நீட்டி அரவணைத்ததும் தமிழ்நாடுதான்.

அந்த மண்டல் அறிக்கை இப்போது முடங்கிப் போய் கிடக்கிறது. தமிழகம் தனக்கான ‘சமூகநீதி’ தனித்துவத்தோடு ஓரணியாகி ஜாதிய உணர்வுகளைத் தூக்கி எறிந்து கரம் கோர்த்து களமாட வேண்டாமா? நாம் என்ன செய்யப் போகிறோம்?

# “தமிழ் நாட்டின் உயர் நீதிமன்றத்தில் மலையாளிகளின் ஆதிக்கமா?”

சென்னை உயர் நீதிமன்றத்திற்குப் புதியதாக நியமிக்கப்பட்டுள்ள புதிய நீதிபதிகள் பட்டியலில் கேரளாவைச் சார்ந்த டெல்லி உச்ச நீதிமன்றத்தில் பணியாற்றும் சுப்ரமணிய பிரசாத் என்பவர் நியமிக்கப்பட்டுள்ளார். ஆனால் இவர் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கறிஞராக ஒருபோதும் பணியாற்றியவர் அல்லர். எங்கோ டெல்லியில் வழக்கறிஞராக உள்ள ஒருவரை தமிழ் நாட்டிற்கும் , சென்னை உயர் நீதிமன்றத்திற்கும் சம்பந்தமில்லாத ஒருவரை நியமிப்பது சரியா ?

சமூக நீதிக்கு முன்னோடியாக உள்ள தமிழ் நாட்டில் இன்றும் கூட சென்னை உயர் நீதிமன்ற நீதிபதியாக தேர்வு செய்யப்படாமல் வாய்ப்பு மறுக்கப்பட்டு வரும் சமூகப் பிரிவினர்களான பிரன்மலைக் கள்ளர்கள், வண்ணார், அருந்ததியர், ஆசாரி, கோனார், முத்தரையர், நாவிதர், போயர், மற்றும் ஏராளமான சமூக பிரிவினரும் மற்றும் பெயரளவில் ஒருவர் மட்டுமே இருக்கும் மீனவர், வன்னியர் போன்ற சமூகப் பிரிவுகளில் ஏராளமான திறமை வாய்ந்த வழக்கறிஞர்கள் உள்ள நிலையில் அவர்களுக்கு வாய்ப்பு வழங்காமல் எங்கோ டெல்லியில் இருக்கும் அதிலும் கேரளாவைச் சார்ந்த ஒருவருக்கு வாய்ப்பு வழங்குவது சமூக நீதியை குழி தோண்டி புதைக்கும் செயல் ஆகும். அதோடு மட்டுமல்லாமல் ஏற்கனவே தமிழ் நாட்டின் தலைமை வழக்கறிஞராக கேரளாவைச் சார்ந்த விஜய நாராயணன் என்பவரை நியமித்து இருப்பதோடு அரசு கூடுதல் வழக்கறிஞராக இன்னொரு கேரளாவைச் சார்ந்த பெண் வழக்கறிஞரை நியமிப்பது என்ன நியாயம் ? இது அநீதி அல்லவா ?

தமிழ் நாட்டு வழக்கறிஞர்களுக்கு இழைக்கப்படும் அநீதி அல்லவா ?

கேரளா பாலக்காட்டைப் பூர்வீகமாகக் கொண்ட டெல்லி வழக்கறிஞர் சுப்பிரமணியம் பிரசாத்தை சென்னை உயர்நீதிமன்றத்திற்கு நீதிபதியாக நியமனம் செய்வதைத் தமிழகம் ஒருபோதும் ஏற்காது.

சென்னை உயர் நீதிமன்றமும் மத்திய பிஜேபி அரசும்

சென்னை உயர் நீதிமன்றத்திற்கு கேரளாவைச் சார்ந்த சுப்ரமணிய பிரசாத்தை நீதிபதியாக நியமிக்கும் உத்தரவைத் திரும்பப் பெற வேண்டும் !

தமிழ் நாட்டு மக்களை போராட்டத்திற்குத் தள்ள வேண்டாம் !

**– கொளத்தூர் மணி**
**தலைவர், திராவிடர் விடுதலைக் கழகம்**

# தேர்வாணையத்தை எதிர்த்து கழக ஆர்ப்பாட்டங்கள்

தமிழ் தெரியாதவர்களும் பிற மாநிலத்தவரும் தமிழ்நாடு தேர்வாணையம் நடத்தும் வேலை வாய்ப்புத் தேர்வுக்கு மனு செய்யலாம் என்ற தமிழ்நாடு தேர்வாணைய அறிவிப்பைத் திரும்பப் பெறக் கோரி கழக சார்பில் கண்டன ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டன.

குமரி மாவட்ட திராவிடர் விடுதலைக்கழகம் சார்பாக மாவட்டத் தலைவர் வழக்கறிஞர்



வே.சதா தலைமையில் 05.12.207 அன்று மாலை 4.00 மணிக்கு மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு தமிழக இளைஞர்களின் வேலை வாய்ப்புகளை வடநாட்டாருக்குத் தாரை வார்க்கும் அரசுத் தேர்வாணையத்தையும் தமிழக அரசையும் கண்டித்து ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இதில் மாவட்ட செயலாளர் தமிழ்மதி, மாவட்ட அமைப்பாளர் தமிழரசன், மாவட்டப் பொருளாளர் மஞ்சுகுமார், பெரியார் தொழிலாளர் கழகத் தலைவர் நீதியரசர், செயலாளர் ஜான்மதி, சூசையப்பா, ஸ்டெல்லா, ராஜேந்திரன், அருந்ததியர் காலனி ஆறுமுகம் , குமரேசன் (ஆதித் தமிழர் கட்சி) , சிவராஜ பூபதி (மக்கள் அதிகாரம்), வழக்கறிஞர்கள் மைக்கிள் ஜெரால்டு, சுதர்மன், சமூக ஆர்வலர் போஸ், புத்தோமணி, மணிகண்டன், விஷ்ணு, சந்தோஷ் மற்றும் பலர் கலந்துகொண்டனர்.

(01.12.2017 அன்று நடைபெறவிருந்த ஆர்ப்பாட்டமானது ஒகி புயல் காரணமாக 05.12.2017 அன்று நடைபெற்றது).

**திருப்பூரில் :** 04.12. 2017 திங்கட்கிழமை. மாலை 4 மணி. மாநகராட்சி அலுவலகம் அருகில் கழகப் பொருளாளர் துரைசாமி தலைமையில்



தமிழக அரசுப் பணியாளர்களாக தமிழ் நாட்டினருக்கே வேலை வாய்ப்பை வழங்கக் கோரியும் கர்நாடகம், குஜராத், மராட்டிய மாநிலங்களில் இருப்பதைப்போல மண்ணின் மைந்தருக்கே வேலை என்ற புதிய சட்டம் இயற்ற வலியுறுத்தியும் கண்டன ஆர்ப்பாட்டம் நடை பெற்றது. மாவட்டத் தலைவர் முகில் ராசு, மாவட்டச் செயலாளர் நீதிராசன், மாவட்டத் தோழர்கள் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர்.

**கோவையில் :** தமிழ்நாடு தேர்வாணையத்தின் தமிழர் விரோத அறிவிப்பைக் கண்டித்து 07.12.2017 மாலை 3 மணிக்கு தெற்கு வட்டாட்சியர் அலுவலகம் முன்பு கண்டன ஆர்ப்



பாட்டம் நடந்தது. தமிழகத்தில் 85 இலட்சம் தமிழக மாணவர்கள் வேலையில்லாத நிலையில் வெளி மாநிலத்தவருக்கு வேலையைத் தாரை வார்க்கும் தேர்வாணையத்தைக் கண்டித்தும், ஊடக அறிவிப்பைத் திரும்பப் பெற வலியுறுத்தியும் தமிழ்நாட்டில் தமிழர்களுக்கே வேலை வழங்கக் கோரியும் முழக்கமிட்டனர். திருப்பூர் துரைசாமி, தலைமையில் நேருதாஸ் முன்னிலையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்தில் சுசி கலையரசன் வி.சி.க, தோழர் வே.வெள்ளிங்கிரி திவிக, தினேசுகுமார் தமிழ்நாடு திராவிடர் கழகம், வினோத்குமார்

(4ஆம் பக்கம்)

# ‘உரிமை மீட்பு கூட்டியக்கம்’ நடத்திய ‘மனித உரிமை நாளில்’ விடுதலை இராசேந்திரன் பேச்சு

# ‘சித்திரவதைகளைத்’ தடை செய்ய மறுக்கும் இந்திய அரசு

டிசம்பர் 10, அய்.நா. மனித உரிமை நாளையொட்டி சென்னை மற்றும் காஞ்சி மாவட்ட மக்கள் சிவில் உரிமைக் கழக முன்முயற்சியால் உருவாக்கப்பட்ட 40 அமைப்புகளைக் கொண்ட உரிமை மீட்பு கூட்டியக்கம் சென்னை மயிலாப்பூர், மாங்கொல்லையில் உரிமை மீட்பு பொதுக் கூட்டம் ஒன்றை சிறப்பாக நடத்தியது. மாற்றுக் கலை ஊடகம், காஞ்சி மக்கள் மன்றத்தின் புரட்சிகர கலை நிகழ்ச்சிகளோடு நடந்த இந்த நிகழ்வுக்கு சென்னை தொழிலாளர் சங்கத்தைச் சார்ந்த எஸ்.நடராசன் தலைமை தாங்கினார். பி.யு.சி.எல். அமைப்பைச் சார்ந்த டி.எஸ்.எஸ்.மணி, பொதுக் கூட்டத்துக்கான ஏற்பாடுகளை முன்முயற்சி எடுத்து ஒருங்கிணைத்தார். வெள்ளையன் (வணிகர் சங்கப் பேரவை), ஹாஜா கனி (த.மு.மு.க) அமீர் (திரைப்பட இயக்குநர்), ஓவியா (புதிய குரல்), வழக்கறிஞர் அருள்மொழி (திராவிடர் கழகம்), எஸ்.எம்.பாக்கர் (இந்திய தவ்ஹீத்), பேராசிரியர் சரசுவதி (பி.யு.சி.எல்.), வினோத் (ஆதித் தமிழர் விடுலை இயக்கம்), கிரேஸ் பானு (திருநங்கை அமைப்பு) உள்ளிட்ட பலரும் உரையாற்றினர். கழக சார்பில் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் உரையாற்றினார். அவரது உரையிலிருந்து:

“அய்.நா. அறிவித்துள்ள உலக மனித உரிமை நாள் இன்று. இந்திய அரசு அய்.நா.வில் ஏற்றுக் கொண்டு நாட்டில் நடைமுறைப்படுத்தாத பல உடன்பாடுகள் உண்டு. சர்வதேச அகதிகளுக்கான உடன்பாட்டில் கையெழுத்திட்ட இந்தியா, அதற்கு, நாட்டில் ஏற்பு வழங்கவில்லை. அதேபோன்று காவல் நிலையத்திலும் இராணுவத்தின் விசாரணையிலும் சித்திரவதைகள் செய்வதைத் தடை செய்யும் உடன்பாட்டில் இந்தியாவின் செயல்பாடுகள் குறித்து சில செய்திகளை பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

காவல் நிலையம், இராணுவ விசாரணையில் ‘சித்திர வதைகள்’ தடைசெய்யப்படவேண்டும் என்று அய்.நா. சர்வதேச உடன்பாடு ஒன்றை உருவாக்கியிருக்கிறது. சித்திரவதைக்கு எதிரான உடன்பாடு 1987ஆம் ஆண்டு அய்.நா.வில் உருவாக்கப்பட்டது. 162 நாடுகள் இந்த உடன்பாட்டில் கையொப்பமிட்டு தங்கள் நாடுகளில் சித்திரவதைகளை நிறுத்தி அய்.நா.வின் உடன்பாட்டை சட்டபூர்வமாகிவிட்டன. 83 நாடுகள் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன. ஆனால் தங்கள் நாடுகளில் அதற்கு சட்டபூர்வமான ஏற்பு வழங்க மறுக்கின்றன. அய்.நா.வின் உடன்பாடுகளை ஒரு நாடு கையெழுத்திட்டு ஏற்றுக் கொண்டு விட்டால் அதன் தொடர் நடவடிக்கையாக அந்த உடன்பாட்டை நாடாளுமன்றத்தின் வழியாக ஏற்பளிக்க வேண்டும். அப்போதுதான் கையொழுத்திட்ட உடன்பாடு செயல் வடிவம் பெறும்.

1987ஆம் ஆண்டு அய்.நா.வில் கொண்டு வரப்பட்ட சித்திரவதைக்கு எதிரான உடன்பாட்டில் முதலில் கையெழுத்திடவே இந்தியா தயங்கியது. 10 ஆண்டுகள் கழித்து, சர்வதேச அழுத்தத்தின் காரணமாகவும் இந்தியா ஒரு ஜனநாயக நாடு என்று உலகத்தின் முன் நாடகமாடவும் 1997ஆம் ஆண்டில் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது. ஆனால், இது வரை நாடாளுமன்றத்தில் இதற்கு ஏற்பு வழங்கப்படவில்லை. சித்திரவதைகளை தடை செய்ய மறுக்கும் நாடுகளான அங்கோலா, பகாமாஸ், புருனே, ஜாம்பியா, ஹைத்தி, சூடான் நாடுகளின் பட்டியலில் இந்தியாவும் இடம் பெற்றுள்ளது.

சர்வதேச ஒப்பந்த அடிப்படையில் சித்திரவதைகள் தடை செய்யப்படாத காரணத்தால் இந்திய கிரிமினல் சட்டங்களை சர்வசாதாரணமாக புறந்தள்ளி, காவல் நிலையங்களும் இராணுவ முகாம்களும் சித்திரவதைகளை நடத்திக் கொண்டிருக்கின்றன.

2008ஆம் ஆண்டு சித்திரவதைக்கு எதிரான ஒப்பந்தங்களை செயல்படுத்தாத நாடுகளை ஆய்வு செய்து அந்த நாடுகளுக்கு அய்.நா. அழுத்தங்களை தந்தது. அப்போது இந்தியா தந்த பதில், “நடைமுறைப்படுத்து வதற்கான வழிமுறைகளை உருவாக்கிக் கொண்டிருக் கிறோம்” என்பதாகும். ஆனால், இந்த முயற்சியில் ஒரு துரும்பைக்கூட இந்திய அரசு கிள்ளிப் போடவில்லை; அய்.நா.வுக்கு பொய்யான வாக்குறுதிகளையே தந்தது.

2011ஆம் ஆண்டு திடீரென ‘சித்திரவதைகளை தடுப்பதில் இந்தியாவுக்கு ஆர்வம் பீறிட்டுக் கிளம்பியது. அய்.நா.வில் இந்தியா தானாகவே முன் வந்து அய்.நாவின் சித்திரவதைக்கான ஒப்பந்தத்துக்கு ஏற்பு வழங்க தயாராக இருக்கிறோம்” என்று இந்தியாவின் பிரதிநிதிகள் நீட்டி முழங்கினார்கள். இந்த திடீர் ‘மனித உரிமை’ கரிசனத் துக்கான காரணம் பிறகுதான் புரிந்தது. அய்.நா.வின் மனித உரிமைக் குழுவில் இடம் பிடிக்க வேண்டும் என்ற நோக்கமே இதன் பின்னணி. எதிர்பார்த்தபடியே மனித உரிமைக் குழுவிலும் இந்தியா இடம் பிடித்தது. அவ்வளவுதான், அப்படியே பிரச்சினையை கிடப்பில் போட்டு விட்டார்கள். மீண்டும் 2012ஆம் ஆண்டில் இந்தியா அய்.நா. மனித உரிமைக் குழுவில் இடம் பிடித்த அடுத்த ஆண்டிலேயே இந்தப் பிரச்சினையை அய்.நா. மறுஆய்வுக்கு எடுத்தது.




அய்.நா.வுக்கு இந்தியாவில் நிகழ்த்தப்படும் சித்திரவதைகள் குறித்த ஏராளமான புகார்கள் குறித்த ஆதாரங்கள் கிடைத்தன. குறிப்பாக இந்தியாவின் ‘தேசிய மனித உரிமை ஆணையம்’ தனது அறிக்கையில் குறிப்பிட்ட ஏராளமான சித்திரவதைகளை அய்.நா.வில் இடம் பெற்ற நாடுகள் எடுத்துக்காட்டி உடனடியாக சித்திரவதைகளை தடை செய்து சட்டம் இயற்றவேண்டும் என்று இந்தியாவை நெருக்கின. அப்போதும் இந்தியாவின் பிரதிநிதி “இதற்கான நடைமுறைகளை தொடங்கியிருக்கிறோம்” என்று தான் சமாதானம் கூறினார்.

இந்த நிலையில் காவல் நிலையம் சித்திரவதைகள் குறித்து பல வழக்குகள் உச்சநீதிமன்றத்திலும் குவிந்தன. ‘வெட்கப்படும் அளவுக்கு சித்திரவதைகள் தொடர்கின்றன’ என்று உச்சநீதிமன்றமே கடுமையான கருத்துகளை பதிவு செய்தன. ‘நாகரிக சமூகத்துக்கான அடையாளங்களை இழந்து எதேச்சாதிகாரம் சர்வாதிகார காலத்தில் நடந்த காட்டுமிராண்டித்தனங்களை நோக்கி நாம் போய்க் கொண்டிருப்பது வெட்கக் கேடானது’ என்று மத்திய பிரதேசத்திலிருந்து வந்த ஒரு சித்திரவதை வழக்கில் (முன்ஷிசிங் கவுதம் - எதிர் ம.பி. அரசு 2004) உச்சநீதி மன்றம் கூறியது. அய்.நா.வில் இந்தத் தீர்ப்புகளையெல்லாம் எடுத்துக்காட்டி இந்தியாவுக்கு நெருக்குதல் தந்தும் ‘பார்ப்பன இந்திய தேசிய அரசு’ அசைந்து கொடுக்கத் தயாராக இல்லை.

பார்ப்பனியம் கட்டமைத்த சமூக அமைப்பே, ‘சித்திர வதை’யை நியாயப்படுத்தி சமூகத்தின் விதிகளாக்கி வைத்திருப்பதை சுட்டிக்காட்ட வேண்டும். பார்ப்பன நீதி நூலான ‘மனு சாஸ்திரம்’, சூத்திரன் வேதத்தைக் கேட்டால் காதில் ஈயத்தை ஊற்ற வேண்டும். வேதத்தைப் படித்தால் நாக்கை வெட்ட வேண்டும் என்று கூறுகிறது. ‘வர்ணாஸ்ரம தர்மத்தை’க் காப்பாற்றுவதற்காக கொலை செய்வது பாவம் இல்லை என்று கிருஷ்ணன் அறிவுறுத்திய ‘கீதை’ தான் இந்த நாட்டில் தேசிய நூலாக போற்றப்படுகிறது. மனுவின் இந்த ‘சித்திரவதை’ சட்டங்கள்தான் பிரிட்டிஷ் காலத்தில் நீதிமன்றங்களிலும் சட்டங்களாக ஏற்கப்பட்டு தீர்ப்பளிக்கப் பட்டன. மெக்காலே பொது கிரிமினல் சட்டத்தைக் கொண்டு வரும் வரை இந்தியாவில் இதுதான் நிலை. இலண்டனில் உச்சநீதிமன்றம்போல் செயல்பட்ட ‘பிரிவிகவுன்சிலில்’கூட பிரிட்டிஷ் நீதிபதிகள் ‘மனு சாஸ்திர’ அடிப்படையில்தான் தீர்ப்புகளை வழங்கினார்கள்.

மனுசாஸ்திரம் அகற்றப்பட்டு பொது கிரிமினல் சட்டம் வந்த பிறகும் சட்டத்தை அமுல்படுத்தும் அரசும், அதன் காவல்துறையும், ‘மனு’வின் மனநிலையோடு ‘ஒரு குலத்துக்கு ஒரு நீதி’யைத்தான் வழங்கி வருகிறது. இந்திய சிறைகளில் இப்போது கைதிகளாக அடைக்கப்பட் டிருப்பவர்கள் யார்? மக்கள் தொகை விகிதாச்சாரத்துக்கு அதிகமாக கைதிகளாக இருப்பவர்கள் இஸ்லாமியர், தலித், ஆதிவாசிகள் தான் என்று இந்தியாவின் தலைசிறந்த ஆய்வு ஏடான ‘எக்னாமிக் அண்ட் பொலிட்டிக்கல் வீக்லி’ ஒரு ஆய்வுக் கட்டுரையை வெளியிட்டிருக்கிறது. எந்தப் பார்ப்பனரும், எந்த ‘மேல் ஜாதி வர்க்க’ குற்றவாளியும் சித்திரவதைக்குள்ளாவதில்லை. ஒடுக்கப்பட்ட சமுதாயத்தி லிருந்து வந்தவர்கள் என்றால் ஜாதியைப் பார்த்து அவர்களை மனிதர்களாகவே மதிக்காத அளவுக்கு விசாரணைகளில் நடத்தப்படுகிறார்கள். ‘மனு சாஸ்திரம்’ இந்திய கிரிமினல் சட்ட அமைப்பில் தனது செல்வாக்கை இன்னும் செலுத்திக் கொண்டே தான் இருக்கிறது. அதனால்தான் இந்திய பார்ப்பன அரசும் ‘சித்திவதைகள்’ தொடர வேண்டும் என்றே விரும்புகிறது.

அய்.நா.வின் சித்திரவதைக்கு எதிரான ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட இந்தியா, 20 ஆண்டுகளுக்குப் பிறகும், அய்.நா. ஒப்பந்தத்துக்கு சட்டப்படியான ஏற்பை வழங்க மறுத்து சில போலி சமாதானங்களைக் கூறுகிறது. “சித்திரவதைக்கு எதிராக முதலில் நாடாளுமன்றத்தில் நாங்கள் சட்டம் கொண்டுவர விரும்புகிறோம். அதற்குப் பிறகு அய்.நா. ஒப்பந்தத்தை இந்தியா ஏற்று நாடாளு மன்றத்தின் வழியாக ஒப்புதல் வழங்குவோம்” என்ற இந்தியாவின் சமாதானத்தை அய்.நா. மனித உரிமை ஆணையம் ஏற்கவில்லை. அய்.நா. மனித உரிமை ஆணையர், “இது மிகத் தவறான சிந்தனை. அய்.நா.வின் ஒப்பந்தத்தைப் பற்றிய புரிதல் இல்லாததையே காட்டுகிறது’ என்று கடுமையான வார்த்தைகளில் விமர்சித்து இருக்கிறார்.

“அய்.நா. உடன்பாட்டை நாடாளுமன்றத்தின் வழியாக ஏற்பதுதான் முதல்படி. இதன் வழியாக சித்திரவதைக்கான எதிர்ப்பை ஒரு நாடு அங்கீகரிக்கிறது. அதற்குப் பிறகுதான் சர்வதேச தரத்தோடு அய்.நா. உருவாக்கிய தீர்மானத்தின் அடிப்படையில் அதே தரத்தில் நாடாளுமன்றத்தில் ஒரு அரசு சட்டம் கொண்டு வர வேண்டும். சித்திரவதைக்கு எதிரான சர்வதேச மனித உரிமை கோரிக்கைகளை பரிசீலனை செய்து தன்னை அடையாளப்படுத்திக் கொள்வதற்கான செயல் முறைதான். அய்.நா.வின் உடன்பாட்டுக்கு நாடாளுமன்றத் தின் ஒப்புதலைப் பெறுவதாகும் என்று அய்.நா.வின் மனித உரிமை ஆணையாளர் தெளிவான விளக்கங்களை அளித்தார்.

அதற்குப் பிறகு ஒரு நாடகம் நடந்தது. 2010ஆம் ஆண்டு இந்திய நாடாளுமன்றத்தில் சித்திரவதைத் தடுப்பு மசோதா ஒன்று முன்மொழியப்பட்டது. அய்.நா.வின் உடன்பாட்டுக்கு ஒப்புதல் வழங்குவதற்கு முன்பு இதைக் கொண்டு வந்தார்கள். உண்மையில் இந்த மசோதாவில் நல்ல அம்சங்கள் இடம் பெற்றிருந்தன. ‘சித்திரவதை’ என்றால் என்ன என்பதற்கான வரம்புகள், இந்த மசோதாவில் மேலும் விரிவாக்கப்பட்டிருந்தது. காவலில் விசாரணை கைதி களுக்கு உணவு மறுப்பது; உறங்கவிடாமல் தடுப்பது; காதைப் பிளக்கும் சத்தங்களை உருவாக்கி அச்சுறுத்து வது; காதை கூச வைப்பது; மின்சார ‘ஷாக்’ தருவது; சிகரெட் நெருப்பினால் உடலைச் சுடுவது உள்ளிட்ட பல்வேறு சித்திரவதை வடிவங்களை இந்த மசோதா அங்கீகரித்தது.

நாடாளுமன்ற ஆய்வுக் குழு இந்த மசோதாவை அங்கீகரித்து, சித்திரவதைக்குள்ளானவர்களுக்கு இழப்பீடுகளை வழங்கும் பிரிவுகளையும் அதில் இணைத்தது. இந்தியாவில் பெரும்பாலான மாநிலங்களும் யூனியன் பிரதேசங்களும் இந்த மசோதாவுக்கு ஆதரவு தெரிவித்த நிலையிலும் மசோதாவை நாடாளுமன்றத்தில் வைத்து சட்டமாக்க இந்திய பார்ப்பன ஆட்சி முன்வர வில்லை. அப்படியே மசோதாவை காலாவதியாக விட்டு விட்டார்கள்.

அய்.நா.வின் தீர்மானத்துக்கு இந்தியா ஏற்பு வழங்கக் கோரி 2016ஆம் ஆண்டில் உச்சநீதிமன்றத்தில் ஒருவர் பொதுநல வழக்கைத் தொடர்ந்தார். மோடி ஆட்சி இந்த வழக்கில் உச்சநீதிமன்றத்தில் எதிர்மனு தாக்கல் செய்தது. சட்ட ஆணையம் இது குறித்து பரிசீலனை செய்து வருவதால் மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என்பதே மோடி அரசு தாக்கல் செய்த எதிர் மனு.

உண்மை என்னவென்றால், அய்.நா. தீர்மானத்துக்கு ஏற்பு வழங்குவதோடு நாடாளுமன்றத்திலும் சித்திர வதைக்கு எதிரான வலிமையான சட்டம் கொண்டு வர வேண்டுமென்று, சட்ட ஆணையம் சட்டவட்டமான பரிந்துரையை வழங்கியிருக்கிறது என்பதுதான்.

ஆனால், ‘மனு சாஸ்திரம் - பகவத்கீதை’யை நீதி நூலாக்கிக் கொண்ட இந்திய பார்ப்பன அரசுகள், அது காங்கிரசானாலும், பா.ஜ.க.வானாலும் காவல்நிலைய இராணுவ முகாம் சித்திரவதைகள் நாட்டில் இருந்தாக வேண்டும். அப்போதுதான் பார்ப்பன-பனியா-பன்னாட்டுக் கம்பெனிகளின் சுரண்டல்களை தங்குதடையின்றி நடத்தக் கூடிய ஒரு அரசை நடத்த முடியும், இஸ்லாமியர், தலித், ஆதிவாசிகள், மிகவும் பிற்படுத்தப்பட்டவர்களின் சமூகப் பொருளாதார சுரண்டல்களைத் தொடர முடியும் என்பதில் உறுதியாகவே நிற்கின்றன” என்றார் விடுதலை இராசேந்திரன். ●

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/16-18 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2016-2018
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

# கழகம் எடுத்த அம்பேத்கர் நினைவு நாள்

### திருப்பூரில்



திராவிடர் விடுதலைக்கழகம் சார்பில் திருப்பூரில் அம்பேத்கர் நினைவு நாளான 06.12.2017 அன்று காலை 11 மணியளவில் அம்பேத்கர் சிலைக்கு கழகத் தலைவர் கொளத்தூர் மணி மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். அப்போது பொருளாளர் துரைசாமி, அறிவியல் மன்ற தலைவர் ஆசிரியர் சிவகாமி, மாவட்டத் தலைவர் முகில்ராசு, தனபால், அகிலன், மாதவன் பரிமளராஜன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உடன் இருந்தனர்.

### பேராவூரணியில்

பேராவூரணியில் தமிழக மக்கள் புரட்சிக் கழகம் சார்பில் அம்பேத்கர் நினைவுநாள் நிகழ்ச்சி நடைபெற்றது. பேருந்து நிலையத்தில் உள்ள அம்பேத்கர்



சிலைக்கு மாநில கொள்கைபரப்புச் செயலாளர் ஆறு. நீலகண்டன் தலைமையில் பல்வேறு இயக்கங்களைச் சேர்ந்தவர்கள் மாலை அணிவித்து மரியாதை செய்தனர். திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில் சித.திருவேங்கடம், தா.கலைச்செல்வன், சுப.செயச்சந்திரன், தமிழக மக்கள் புரட்சிக் கழகத் தோழர்கள் ஏனாதி சம்பத், ஆயில் மதியழகன், இரா மதியழகன், ரெட்டவயல் மாரிமுத்து, கிறித்தவ நல்லெண்ண இயக்க பொறுப்பாளர் ஆயர் த.ஜேம்ஸ், மெய்ச்சுடர் நா.வெங்கடேசன் ஆகியோர் அம்பேத்கர் சிலைக்கு மரியாதை செய்தனர். நிகழ்வில் சமூக நீதிக்கு எதிராக மனுநீதியை நிலைநிறுத்த நினைக்கும் மத்திய மாநில அரசுகளுக்கு எதிராக முழக்கங்கள் எழுப்பப்பட்டன. பெண்ணுரிமை, சமூகநீதி, சமூக நல்லிணக்கம் போன்றவற்றைப் பாதுகாத்திட அம்பேத்கரின் வழிகளை அனைவரும் பின்பற்ற வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டது.

### சென்னையில்

அண்ணல் அம்பேத்கரின் நினைவு நாளான 06.12.2017 காலை திராவிடர் விடுதலைக் கழகத்தின் சென்னை மாவட்ட பொறுப்பாளர்கள், தோழர்கள் பசுமை வழிச் சாலையில் அமைந்துள்ள அம்பேத்கர் மணி மண்டபத்தில் அம்பேத்கர் சிலைக்கு மாலை அணிவித்து வீரவணக்கத்தை செலுத்தினர்.

அதை தொடர்ந்து மயிலாப்பூர் பகுதியில் அமைந்துள்ள அம்பேத்கர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதையை செலுத்தினர். கழகப் பொறுப்பளர்கள் தபசி குமரன், இரா. உமாபதி, வேழவேந்தன், பிரகாஷ், செந்தில் எப்.டி.எல்., ஏசுகுமார்,



அய்யனார், மயிலைப் பகுதி தோழர்கள் சுகுமார், மாரி, இராவணன், சிவா, மாணவர் கழகத்தோழர் பாரி சிவா, சைதை மனோகரன் உள்ளிட்ட கழகப் பொறுப்பாளர்களோடு தோழர்களும் பங்கேற்றனர்.

### கோவையில் கழகத் தலைவர் பேச்சு




டிசம்பர் 6ஆம் தேதி பிற்பகல் 3 மணிக்கு கோவை வழக்கறிஞர் சங்கக் கூடத்தில் புரட்சியாளர் அம்பேத்கார் நினைவு நாளை ஒட்டி திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் கொளத்தூர்மணி சிறப்புரை ஆற்றினார்.

அம்பேத்கரின் ஒரே கனவு உரிமையற்றவர்களின் உயர்வுக்கு ஏதாவது செய்ய வேண்டும் என்பதே. அம்பேத்காரின் அஹிம்சை என்பது அடங்கிப்போவது அல்ல. இம்சைக்கு எதிரானதும் அஹிம்சைதான். என் அஹிம்சை அதுதான் என்று விளக்கியதோடு, ஜாதியை பற்றி அம்பேத்கார் பெரியாரின் பார்வையும் ஒன்றே என்றார்.

“கூடா ஒழுக்கத்தினால் இவ்வளவு ஜாதிகள்” என்று அம்பேத்கார் கூறினார்.

“விபச்சாரமே இவ்வளவு ஜாதிகளுக்குக் காரணம்” என்று பெரியார் கூறினார் என்று கழகத் தலைவர் ஒப்பிட்டுக் காட்டினார்.

## 2018 – கழக நாள்காட்டி தயார்!

2018ஆம் ஆண்டுக்கான கழக நாள்காட்டி தயாராகி வருகின்றன.

அழகிய வடிவமைப்பு; சமூகப் போராளிகளின் படங்களோடு...

நாள்காட்டி ஒன்றின் விலை : ரூ.70

தோழர்கள் முன்பணம் செலுத்தி நாள்காட்டியைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஈரோடு கழக மாநாட்டில் கிடைக்கும்.

**– தபசி குமரன்,**
**தலைமைக் கழகச் செயலாளர்**




(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

தந்தைபெரியார் திக, பன்னீர்செல்வம் சமூகநீதிக் கட்சி, கார்க்கி சமத்துவக் கழகம், இளவேனில் தமிழ்ப்புலிகள் கட்சி, பெரோஸ்பாபு ஆர்.ஒய்.எம், பேரறிவாளன் ஆதித் தமிழர் கட்சி, புரட்சிகர இளைஞர் முன்னணி கண் மணி, எழுத்தாளர் நடராசன், தமிழ் நாடு மாணவர் கழகம் அஜித்குமார், போன்றோர் ஆர்ப்பாட்டத்தில் 60 பேர் கலந்து கொண்டனர். நன்றியுரை நிர்மல் குமார் கூறினார்.

## டிசம்பர் 6 : கண்டன ஆர்ப்பாட்டத்தில் கழகத் தலைவர் பொதுச் செயலாளர் பங்கேற்பு

டிசம்பர் 6ஆம் தேதி பாபர் மசூதி இடிப்பு நாளை இஸ்லாமிய அமைப்புகள் கருப்பு நாளாக கண்டன ஆர்ப்பாட்டங்களை தமிழகம் முழுதும் நடத்தின.

திருப்பூரில் எஸ்.டி.பி.அய். நடத்திய கண்டன ஆர்ப்பாட்டத்தில் கழகத் தலைவர் கொளத்தூர் மணியும், வேலூரில் மனிதநேய மக்கள் கட்சி நடத்திய கண்டன ஆர்ப்பாட்டத்தில் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரனும் பங்கேற்றுப் பேசினார்கள்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 14th December 2017

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN